Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திவ்யஸ்ரீ | ஜாதி | : | |
| க/பெ | : | சேகர் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 30/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டையில் எனது அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 2017 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம், மண்டபத்தில் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. எனக்கு 6 வயதில் ஒரு மகன் உள்ளார். கல்யாணம் ஆன சமயத்தில் எனது கணவர் பார்த்தசாரதி என்னுடன் நல்லாக தான் இருந்தார். அதன்பின்னர் நான் கர்ப்பமானேன். அதன்பின்னர் என் கணவர் என்னை கொடுமைபடுத்தினார். எனது கணவரின் மாமனார், மாமியார் ஆகியோர்கள் திருப்பரங்குன்றத்தில் உள்ள எனது கணவர் வீட்டில் வைத்து அடிக்கடி என்னை கொடுமை படுத்தினார். எனது மாமனாரும், மாமியாரும் என் கணவருடன் இருக்கக்கூடாது என கொடுமைபடுத்தினார்கள். அப்போது டெலிவரிக்காக என் அம்மா வீட்டிற்கு வந்தேன். எனக்கு சின்னாளபட்டியில் குழந்தை பிறந்த சமயத்தில் மாமனார், மாமியார், எனது கணவர் ஆகியோர் வந்தார்கள்.

வந்தவுடனே பார்த்துவிட்டு சென்றுவிட்டனர். எனது மாமனார், மாமியார் மற்றும் கணவர் ஆகியோர் நான் கர்ப்பமாக திருப்பரங்குன்றத்தில் இருக்கும்போது தனியாக வீடு வாங்கி தரவேண்டும் என்று என்னிடம் கேட்டார்கள். இப்போது எங்களால் முடியாது, தற்போது தான் கல்யாணம் செய்தார்கள் என்று சொன்னேன். கல்யாணத்திற்கு 20 பவுனுக்கு மேல் போட்டார்கள் என்று சொன்னேன். டெலிவரியான 10 நாட்கள் என்னை திருப்பரங்குன்றத்திற்கு 3 பேரும் என்னை கூப்பிட்டு சென்றுவிட்டார்கள். அங்கு என் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கவிடாமல் தடுத்தனர். என்னையும், என் குழந்தையையும்

தூங்கவிடாமல் கொடுமைபடுத்தினார்கள். என் அப்பாவிடம் தகவலை சொன்னேன். என் அப்பா பேங்கில் கடன் வாங்கி ரூ.1,50,000/- கடன் வாங்கி கொடுத்தார். அதை நான் என் மாமனாரிடம் வாங்கி கொடுத்தேன். அதன்பின்பும் என்னை கொடுமைபடுத்தினார்கள்.

அதன்பின்னர் 22.12.2018 ஆம் வருடம் என் குழந்தையை தூக்கிகொண்டு சின்னாளபட்டியில் உள்ள எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின்னர் அவரது தம்பி போனில் மெசேஜ் பன்னி குழந்தையை கொடுக்க வேண்டும் என மிரட்டினார். பின்னர் எனது கணவர் வீட்டில் இருந்து உறவினர்கள் வந்து பேச வேண்டும் என வற்புறுத்தினார்கள். அதன்பின்னர் நான் திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன்பின்னர் எனது கணவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றத்தில் சமரசத்திற்காக அனுப்பினார்கள். அங்கு சமரசத்திற்கு எனது கணவர் நான் பணிமாறுதல் சென்றுவிட்டு வந்து அழைத்துச் செல்கிறேன் என்று சொன்னார். அதன்பின்பு அவர் வரவேயில்லை.

அதன்பின்பு எனது கணவர் திருப்பரங்குன்றத்தில் புகார் கொடுத்தார். அதன்பின்னர் நான் 26.01.2020 ஆம் தேதி சின்னாளபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாருக்கு மனு ரசீது கொடுத்தார்கள், ஆனால் விசாரணைக்கு எனது கணவர் வரவில்லை. நான் நீதிமன்றத்தில் கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **(அ.சா.ஆ-1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க மனுதாக்கல் செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தொடர்பாக உங்களை காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எப்போது உங்களை விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது விசாரித்தார்கள். நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினீர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 ராம்ஜி உங்களது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 ராகவன் உங்கள் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 உங்கள் தாயாரின் தம்பி என்றால்

சரிதான். பட்டியல் சாட்சி 5 மற்றும் 6 உங்கள் குடும்பத்தினருடன் நீண்டகாலமாக பழக்கம் உள்ளவர்கள் என்றால் சரிதான்.

பட்டியல் சாட்சியான 2 முதல் 5 வரையிலான சாட்சிகளை நீங்கள் தான் போலிசாரிடம் கூறினீர்கள் என்றால் சரிதான். 2வது எதிரியான உங்களது மாமனார் 5 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சாலை விபத்தில் கால் அடிபட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரிதான். கடந்த 2020 முதல் நீங்கள் உடுமலைப்பேட்டையில் உங்கள் குடும்பத்தினருடன் தற்போது வரை வசித்துவருகிறீர்கள் என்றால் சரியல்ல, 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வசித்துவருகிறேன். தற்போது வரை அங்கு தான் உள்ளேன். உடுமலைப்பேட்டையில் உங்கள் தாயார் மற்றும் உறவினர்களுடன் இருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து உங்கள் தாயார் உள்ளிட்டட குடும்பத்தாருக்கு தெரியும் என்றால் சரிதான். 2017 ஆம் ஆண்டு எந்த மாதம் திருமணம் நடந்தது என்றால் 30.11.2017 ஆம் தேதி திருமணம் நடந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை உங்கள் கணவருடன் ஓராண்டு காலம் தான் ஒன்றாக இருந்தீர்கள் என்றால் சரியல்ல, அதற்கு மேல் இருக்கும். திருமணம் நடந்தபிறகு 7 மாதத்தில் வளைகாப்பு முடிந்து சின்னாளபட்டிக்கு உங்கள் பெற்றோர் வீட்டிற்கு வந்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் பொறியியல் பட்டம் படித்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

ஜூலை 2018 ஆம் தேதி வளைகாப்பு முடிந்து உங்களது பெற்றோர் வீட்டிற்கு நீங்கள் வந்தீர்கள் என்றால் மாதம் எனக்கு நினைவில்லை, ஜூன் அல்லது ஜூலை மாதம் இருக்கும், 2018 ஆம் ஆண்டு தான். குழந்தை பிறந்த பிறகு 3 மாதங்கள் கிழித்து 1 ஆம் எதிரி வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவருடன் வாழ பிடிக்காமல் பெரும்பாலும் உங்கள் தாயர் வீட்டிலேயே இருந்து வந்தீர்கள் என்றும், அதன்தொடர்ச்சியாக திண்டுக்கல் மகளிர் காவல் நிலையத்திலும், சின்னாளபட்டி காவல் நிலைத்திலும் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.

உங்கள் கணவர் மதுரை குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP.No.218/2021 என்ற எண்ணில் விவகாரத்து கோரி அந்த பரிகாரம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான், ஒருதலைபட்ட உத்தரவு வாங்கியுள்ளார்கள். இந்த வழக்கின் புகார் கொடுக்கப்பட்ட பிறகு 2021 அக்டோபர் முதல் 2023 டிசம்பர் வரை உங்கள் கணவருடன் ஒன்றாக வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போலவும், புகாரில் குறிப்பிட்டுள்ளது போலவும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உங்கள் கணவருடன் சேர்ந்து வாழ்ந்தும், பின்னிட்டு பழிவாங்கும் நோக்கத்துடன் இந்த வழக்கில் தொடர்ந்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த புகாருக்கு பிறகும் நீங்கள் 2 ஆண்டுகள் 1 எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்ததால் புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. நீங்கள் புகாரிலும், சாட்சியத்திலும் சொல்லியுள்ளது போல எதிரிகள் ஆபாசமாக பேசவில்லை என்றும், துன்புறுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

உங்கள் கணவரிடம் இருந்து பிரிந்து தனியாக வாழ்வதற்காக 2 முதல் 4 எதிரிகளையும் சேர்த்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 4 வது எதிரி உங்களை போன் மூலமாக குழந்தையை கொண்டுவா என்று நீங்கள் சொல்லியுள்ளதற்கு எந்த ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் உண்மைதன்மை இல்லாததால் தான் நீங்கள் பலமுறை கொடுத்த புகாரில் மேல் நடவடிக்கை எதுவும் இல்லை என்றும், பொய்யான சங்கதிகளை சொல்லி நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராகவன் | ஜாதி | : | |
| க/பெ | : | பொம்மையா | தொழில் | : | சொந்த தொழில் |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டியில் குடியிருந்து கொண்டு சொந்த தொழில் பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது சமூகத்தை சேர்ந்தவர் ஆவார், நான் குடியிருந்த பகுதியில் அவர் ஏற்கனவே குடும்பத்தாருடன் குடியிருந்தார். எதற்காக திவ்யஸ்ரீ புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 22.12.2018 ஆம் தேதி அ.சா.1 திவ்யஸ்ரீ சின்னாளபட்டிக்கு வந்ததாகவும், அப்போது திவ்யஸ்ரீயின் கணவர் பார்த்தசாரதி, சந்தோஷ்குமார், கணேசன், வீரலட்சுமி ஆகியோர் பகல் 12.00 மணியளவில் சேகர் என்பவரின் வீட்டிற்கு முன்பு பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது திவ்யஸ்ரீயை கெட்டவார்த்தையால் திவ்யஸ்ரீயின் கணவர் பார்த்தசாரதி மற்றும் அவர் தம்பி வீட்டிற்கு வரவில்லை என்றால் கொலைசெய்து

விடுவோம் என்று மிரட்டியதகாவும், மேற்படி சம்பவத்தை பார்த்ததாகவும், தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition of PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லையா | ஜாதி | : | |
| க/பெ | : | பொன்ராம் | தொழில் | : | உடல்நிலை சரியில்லாததால் வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 65/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை மகள் ஆவார். அ.சா.1 திவ்யஸ்ரீக்கு திருப்பரங்குன்றத்திற்கு சென்றேன். தாய்மாமன் என்பதால் நான் போனேன். அதன்பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

திவ்யஸ்ரீயை ஆஜர் எதிரிகள் கொடுமைபடுத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. கடந்த 22.12.2018 ஆம் தேதி அ.சா.1 திவ்யஸ்ரீ சின்னாளபட்டிக்கு வந்ததாகவும், அப்போது திவ்யஸ்ரீயின் கணவர் பார்த்தசாரதி, சந்தோஷ்குமார், கணேசன், வீரலட்சுமி ஆகியோர் பகல் 12.00 மணியளவில் சேகர் என்பவரின் வீட்டிற்கு முன்பு பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது திவ்யஸ்ரீயை கெட்டவார்த்தையால் திவ்யஸ்ரீயின் கணவர் பார்த்தசாரதி மற்றும் அவர் தம்பி வீட்டிற்கு வரவில்லை என்றால் கொலைசெய்து

விடுவோம் என்று மிரட்டியததகாவும், மேற்படி சம்பவத்தை பார்த்ததாகவும், தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor